ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 3.7 – ஐயபுழுதி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.7 – ஐயபுழுதி

‡ ஐய புழுதி உடம்பளைந்து ⋆ இவள் பேச்சும் அலந்தலையாய் ⋆
செய்ய நூலின் சிற்றாடை ⋆ செப்பன் உடுக்கவும் வல்லள் அல்லள் ⋆
கையினில் சிறு தூதை யோடு ⋆ இவள் முற்றில் பிரிந்தும் இலள் ⋆
பை அரவணைப் பள்ளியானொடு ⋆ கைவைத்திவள் வருமே ‖ **3.7.1** ‖

வாயில் பல்லும் எழுந்தில ⋆ மயிரும் முடி கூடிற்றில ⋆
சாய்விலாத குறுந்தலைச் ⋆ சில பிள்ளைகளோடிணங்கி ⋆
தீ இணக்கிணங்காடி வந்து ⋆ இவள் தன் அன்ன செம்மை சொல்லி ⋆
மாயன் மா மணிவண்ணன் மேல் ⋆ இவள் மால் உறுகின்றாளே ‖ **3.7.2** ‖

பொங்கு வெண்மணல் கொண்டு ⋆ சிற்றிலும் முற்றத்திழைக்கலுறில் ⋆
சங்கு சக்கரம் தண்டு வாள் ⋆ வில்லும் அல்லதிழைக்கலுறாள் ⋆
கொங்கை இன்னம் குவிந்தெழுந்தில ⋆ கோவிந்தனோடிவளைச் ⋆
சங்கை யாகி என் உள்ளம் ⋆ நாள்தொறும் தட்டுளுப்பாகின்றதே ‖ **3.7.3** ‖

ஏழை பேதை ஓர் பாலகன் வந்து ⋆ என் பெண் மகளை எள்கி ⋆
தோழிமார் பலர் கொண்டு போய்ச் ⋆ செய்த சூழ்ச்சியை யார்க்குரைக்கேன் ⋆
ஆழியான் என்னும் ஆழ மோழையில் ⋆ பாய்ச்சி அகப்படுத்தி ⋆
மூழை உப்பறியாததென்னும் ⋆ மூதுரையும் இலளே ‖ **3.7.4** ‖

நாடும் ஊரும் அறியவே போய் ⋆ நல்ல துழாய் அலங்கல்
சூடி ⋆ நாரணன் போம் இடம் எல்லாம் ⋆ சோதித்துழிதர்கின்றாள் ⋆
கேடு வேண்டுகின்றார் பலர் உளர் ⋆ கேசவனோடிவளை ⋆
பாடு காவல் இடுமின் என்றென்று ⋆ பார் தடுமாறினதே ‖ **3.7.5** ‖

பட்டம் கட்டிப் பொற்றோடு பெய்து ⋆ இவள் பாடகமும் சிலம்பும் ⋆
இட்ட மாக வளர்த்தெடுத்தேனுக்கு ⋆ என்னோடிருக் கலுறாள் ⋆
பொட்டப் போய்ப் புறப்பட்டு நின்று ⋆ இவள் பூவைப் பூவண்ணா என்னும் ⋆
வட்ட வார் குழல் மங்கைமீர் ! ⋆ இவள் மால் உறுகின்றாளே ॥ **3.7.6** ॥

பேசவும் தெரியாத பெண்மையின் ⋆ பேதையேன் பேதை இவள் ⋆
கூசமின்றி நின்றார்கள் தம் எதிர் ⋆ கோல் கழிந்தான் மூழையாய் ⋆
கேசவா என்றும் கேடிலீ என்றும் ⋆ கிஞ்சுக வாய் மொழியாள் ⋆
வாச வார் குழல் மங்கைமீர் ! ⋆ இவள் மால் உறுகின்றாளே ॥ **3.7.7** ॥

காறை பூணும் கண்ணாடி காணும் ⋆ தன் கையில் வளை குலுக்கும் ⋆
கூறை உடுக்கும் அயர்க்கும் ⋆ தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும் ⋆
தேறித் தேறி நின்றாயிரம் பேர்த் ⋆ தேவன் திறம் பிதற்றும் ⋆
மாறில் மா மணிவண்ணன் மேல் ⋆ இவள் மால் உறுகின்றாளே ॥**3.7.8** ॥

கைத்தலத்துள்ள மாடழியக் ⋆ கண்ணாலங்கள் செய்து ⋆ இவளை
வைத்து வைத்துக் கொண்டென்ன வாணிபம் ⋆ நம்மை வடுப்படுத்தும் ⋆
செய்த்தலை எழு நாற்றுப் போல் ⋆ அவன் செய்வன செய்து கொள்ள ⋆
மைத் தடமுகில் வண்ணன் பக்கல் ⋆ வளர விடுமின்களே ॥ **3.7.9** ॥

பெருப் பெருத்த கண்ணாலங்கள் செய்து ⋆ பேணி நம் இல்லத்துள்ளே ⋆
இருத்துவான் எண்ணி நாம் இருக்க ⋆ இவளும் ஒன்றெண்ணுகின்றாள் ⋆
மருத்துவப் பதம் நீங்கினாள் என்னும் ⋆ வார்த்தை படுவதன் முன் ⋆
ஒருப்படுத்திடுமின் இவளை ⋆ உலகளந்தான் இடைக்கே ॥ **3.7.10** ॥

‡ ஞால முற்றும் உண்டாலிலைத் துயில் ⋆ நாராயணனுக்கு ⋆ இவள்
மாலதாகி மகிழ்ந்தனள் என்று ⋆ தாய் உரை செய்ததனை ⋆
கோலம் ஆர் பொழில் சூழ் புதுவையர் கோன் ⋆ விட்டுசித்தன் சொன்ன ⋆
மாலை பத்தும் வல்லவர்கட்கு ⋆ இல்லை வரு துயரே ॥ **3.7.11** ॥

அடிவரவு — ஐய வாயில் பொங்கு ஏழை நாடு பட்டம் பேச காறை கைத்தலத்து பெரு ஞாலம் நல்லது

ஐயபுழுதி முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்